முருகப்பெருமான் துணை

**மகான் இளையான்குடிமாற நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.06.2022, வியாழக்கிழமை

1. ஞானக் கடலே குருராசா
ஞானபண்டிதன் சக்தியாக வந்த
ஞானதேசிகனே அரங்கா போற்றி
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவிலா சுபகிருது மிதுன திங்கள்
தெரிவிக்க மூவையோர் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 16 நாள், 30.06.2022 வியாழக்கிழமை)
தேசிகனுக்கு இளையான்குடிமாற நாயனாரும்
3. நாயனாரும் உலகநலமுற உரைப்பேன்
நன்மைதரும் அரங்கன் வழிதனை
தயவாக உலகமக்கள் ஏற்று
தன்னார்வத் தொண்டர்களாகிச் சேர
4. சேரவே மக்களிடை குருவருள்
சிறப்பான சக்தியாகக் கூடி
கூறவே தயவும் தருமமும்
குருவருள் வழி சூட்சும பலமாக
5. பலமாக நிறைந்து பேருலகில்
பாதுகாக்கும் சக்தியாக மாறும்
வலம்வர அரங்கன் திருவடியை
வரம்பல மக்களுக்கு கிட்டியே
6. கிட்டியே பேரின்பம் என்கின்ற
குறைவிலா ஞான வழியும்
தட்டாது சித்திக்கும் என்பேன்
தரணியே அரங்கமகான் வழிகாட்டலில்
7. வழிகாட்டலில் ஞானப்படைகளாகி
வல்லமை கூடும் மக்களுக்கு
அழியாமை நிலை உறுதியாகி
அறிவிப்பேன் உலகை மாற்றுகின்ற
8. மாற்றுகின்ற மகான்கள் எல்லாம்
மக்கள் வழி உலகமெங்கும்
ஆற்றலாக வெளிப்பட்டு உலகினில்
ஆறுமுகனார் தலைமை ஏற்ற
9. ஏற்ற ஞான சித்தர் காலம்
எங்கும் கனிந்து சடுதி
மாற்றம் காணும் ஞான ஆட்சியதும்
மனிதர்கள் ஆட்சி முடிவு கண்டுமே

10. கண்டுரைக்க இவை அற்புதம்
கணக்காய் ஞானியர் அவதார
தொண்டுவழி மாற்றம் ஆகும்
தெய்வநெறி மிகுந்து உலகம்

11. உலகம் பாதுகாப்புக் கூடி
உயர்வும் சிறப்பும் காணும்
கலகமிலா அமைதி பூமியாகும்
கண்டுரைத்த அருளாசி முற்றே

–சுபம்–